1984 மார்ச் 16]

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் திட்டம்

*341(வினா எண். 13585)திரு து. இராசரத்தினம் :மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றிய பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாமல் இருந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், புதிதாக ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(ஈ) எந்த இடத்தில் ஆரம்பிக்க உத்தேசம்?

மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே : (அ.) ஆவடியில் ஏற்கெனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. (ஆ), (இ), மற்றும்(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையை விரிவுப்படுத்தும் திட்டம்.

*342 வினா எண் 19438 திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை

(ஆ) இவ் வினா எழ இடமில்லை.

திரு. பி. துரைராஜ்: துணைத் தலைவரவர்களே, சங்கரன் கோவில் வட்டாரம் மிகவும் பிற்பட்ட மக்கள்' ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் நிறைய வாழும் பகுதியாகும். எனவே அங்கே இருக்கிற அரசு மருத்துவமனையில் ஹோமியோ பதி மருத்துவப்பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே துணைத் தலைவரவர் ளே' அதுபற்றி தற்போது எந்தவிதமான குறிப்பும் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சங்கரன் கோவிலில் தொற்று நோய்ப்பிரிவு என்று ஒரு கட்டிடம் இருந்து செயல்படவேயில்லை. அங்கு எக்ஸ்ரே பிரிவில் பிலிம்கள் இல்லாமலே எக்ஸ்ரே எடுக்க சிரமப்படுவதாகத் தெரிகிறது. அதுமட்டுமல்ல, ஆப்பரேஷன் செய்வதுகூட சங்கரன்கோவிலில் போதுமான அளவிற்கு செயல்படவில்லை என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே சங்கரன் கோவிலின் சுற்று வட்டாரங்களில் ஏழை எளிய மக்கள் சாதாரண மக்கள் இருப்பதால், அதற்கான விசேஷ ஏற்பாடாக முன்னுரிமை கொடுத்து, அதை நடத்துவதற்காக மறு பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேஜர் ஆப்பரேஷன் அங்கு செய்வது 45, ஒரு ஆண்டுக்கு மைனர் ஆப்பரேஷன் 110-ஆக அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருக்கின்றன. எக்ஸ்ரே பிரிவும் அங்கு செயல்பட்டுக்கொண்டு வருகிறது. ஆறு மாதத்திற்கு முன்பு பிலிம்கள் இல்லை. ஒட்டு மொத்தமாக உதகையிலே நடைபெற்ற ஸ்ட்ரைக்கைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அந்த ஸ்ட்ரைக் எப்படி எல்லாம் நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். அதன் விளைவாக நமக்கு பிலிம்கள் கிடைக்கவில்லை. இப்போது பிரச்சினை இல்லை.

கீரனூர் அரசு மருத்துவ மனையை விரிவுப்படுத்தும் திட்டம்

*343 (வினா எண். 19887) திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

குளத்தூர் தொகுதியில் உள்ள கீரனூர் அரசு மருத்துவ மனையைக் கூடுதல் படுக்கை வசதியுடன் விரிவுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இல்லை.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீரனூர் நகரத்தில் கூடுதல் படுக்கை வசதி இல்லை என்று சொன்னார்கள். இப்போது அரசு மருத்துவ மனை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதே நிலையில் தான் இருக்கிறது. ஆனால் மக்கட்தொகை எந்த அளவிற்கு அதிகரித்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். கீரனூர் தாலுக்கா சென்டர். அங்கே பல பள்ளிகள் அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள், இப்போது அங்கே பிரசவ வசதி இல்லை. மாவட்ட வளர்ச்சி